டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்

ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 7.9.2024 சனிக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 068 - Madurai | Online Edition

# மீன்வள ஏற்றுமதி மேம்பாடு குறித்து மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் ஆலோசனை

புது தில்லி, செப்.6

ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் மீன்வள ஏற்றுமதி மேம்பாடு குறித்த பங்குதாரர் ஆலோசனைக் கூட்டம் மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லாலன் சிங் தலைமையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் சிறு பான்மையினர் நலத்துறை இணையமைச்சர் ஜார்ஜ் குரியனும் பங்கேற்றார்.

9 சதவீத வலுவான வளர்ச்சி விகிதத்தை கொண்டுள்ள இந்தியப் பொருளாதாரத்தில் மீன்வளத் துறையின் முக்கிய பங்கினை மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் எடுத்துரைத் தார். இந்த வளர்ச்சி 2047-ம் ஆண்டில் இந்தியாவை வளர்ச்சி யடைந்ததாக மாற்றுவதில் ஒரு மைல் கல்லாக இருக்கும் என்று அவர் கூறினார். இத்துறையின் பரந்த திறனைப் பயன்படுத்தி, நாட்டை சர்வதேச பதப்படுத்தும் மையமாக மாற்ற இந்திய அரசு லட்சிய இலக்குகளை நிர்ணயித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் தொழில் நுட்பங் களை உள்ளடக்கிய ஸ்மார்ட் மற்றும் ஒருங்கிணைந்த துறை முகங்களை மேம்படுத்துவதன் மூலம் மீன் ஏற்றுமதியை அதிகரிக்க மீன்வளத் துறையை டிஜிட்டல் மயமாக்குவது முக்கிய மானது என்று அமைச்சர் குறிப்பிட்டார். இறால் பிரிவை மேலும் மேம்படுத்துவதற்காக கரு இனப்பெருக்க மையங்களை நிறுவுவதற்கான பட்ஜெட் ஒதுக்கீடுகள் பற்றிய விவரங்களையும் அவர் எடுத்துரைத்தார்.

அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் லட்சத்தீவு தீவுகளில் மீன்பிடி உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்

பற்றி குறிப்பிட்ட அமைச்சர், நோய் தாக்காத சினை மீன்கள் மற்றும் விதைகளை பராமரிப்பதில் உள்ள சவால்களை எதிர்கொள்ள, விரிவான பரிந்துரைகளை வழங்க ஒரு குழு அமைக்கப்படும் என்றார்.

2024, ஆகஸ்ட் 30 அன்று மகாராஷ்டிராவின் பால்கரில் பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கி வைக்கப்பட்ட ரூ.1564 கோடி மதிப்பிலான 218 புதிய திட்டங்கள் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்பதாக மத்திய இணையமைச்சர் ஜார்ஜ் குரியன் தெரிவித்தார்.

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் தொழில்முனைவோர், மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## துவரை முன்னிலை செயல்விளக்க திடல் அமைக்க நாற்றங்கால் அமைத்த வேளாண் மாணவிகள்



திருச்சி, செப்.6

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரம், வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராணியின் அறிவுரைப்படி பூனாம்பாளையம் கிராமத்தில் (5.9.24) அன்று தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் துவரை முன்னிலை செயல்விளக்க திடல் அமைக்க ஏதுவாக திண்டுக்கல் காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தை சேர்ந்த இளங்கலை வேளாண்மை இறுதி ஆண்டு மாணவிகள் விசாலினி, விக்னேஷ்வரி, அபிநயா, கயல்விழி, ரேணுகா தேவி ஆகியோர் (Poly bag nursery) நாற்றங்கால் அமைத்தனர்.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர் பார்த்திபன் செய்திருந்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மீனவ பெண்களுக்கு மீன் கழிவுகளில் இருந்து இயற்கை உரங்கள் தயாரிக்கும் பயிற்சி




இராமநாதபுரம், செப்.6 ரிலையன்ஸ் அறக்கட்டளை, வேளாண் துறை மற்றும் வேளாண் அறிவியல் நிலையம், குயவன்குடி ஆகியவை இணைந்து மீனவ பெண் தொழில் முனைவோர்களுக்கு மீன் கழிவுகளில் இருந்து இயற்கையான உரங்கள் தயாரிப்பது குறித்த பயிற்சியானது குயவன்குடி வேளாண் அறிவியல் நிலையத்தில் வேளாண் துணை இயக்குனர் (மாநில திட்டம்) அமர்லால் மற்றும் திருப்புல்லாணி வட்டார வேளாண் உதவி இயக்குனர் செல்வம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் மூலம் இயற்கை உரங்கள் தயாரிப்பது குறித்தும் அதற்கான அரசு திட்டங்கள் குறித்து விளக்கமளித்தனர்.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

ரிலையன்ஸ் அறக்கட்டளை மூலம் மீனவர்கள், விவசாயிகள் மற்றும் பெண் தொழில் முனைவோருக்கு செயல்படுத்தப்பட்டு வரும் தகவல் சேவை குறித்து மாவட்ட மேலாளர் ஸ்ரீகிருபா விளக்கினார். குயவன்குடி வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வள்ளல் கண்ணன் முன்னிலையில் நடைபெற்ற இப்பயிற்சியில் முனைவர் விஜயகுமார் தொழில்நுட்ப வல்லுனர் (உணவு மற்றும் ஊட்டசத்து) விஜயகுமார் மற்றும் வித்தியா, திட்ட

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

உதவியாளர் (தொழில்நுட்பம்) ஆகியோர் மீன் அமிலம், உரங்கள் தயாரிக்கும் முறை, குறித்தும் மீன்களில் இருந்து மதிப்பு கூட்டிய பொருள்களை தயாரிப்பதும், விற்பனை செய்வது குறித்தும் பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மண்டபம் வேளாண் அலுவலர் கலைவாணி, ரிலையன்ஸ் அறக்கட்டளையின் களப் பணியாளர் இராமு ஆகியோர் செய்து இருந்தனர்.

இதில் மண்டபம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள மீனவப் பெண் தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# ஏற்காடு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் விஞ்ஞானிகள் விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி



சேலம், செப்.6

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் விஞ்ஞானிகள் விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி 3 மற்றும் 4.9.24 நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குனர் சிங்காரம் வேளாண்மை துணை இயக்குனர் நாகராஜ் வேளாண்மை உழவர் பயிற்சி நிலையம் சார்ந்த வேளாண்மை அலுவலர் நிறைமதி மற்றும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் முனைவர் மாலதி மற்றும் சகோதரத்துறை சார்ந்த அதிகாரிகள் போன்றோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் வாயிலாக ஏற்காடு வட்டார பகுதியினை சார்ந்த 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் பகுதியில் ஏற்பட்டுள்ள நோய் தாக்குதல் பூச்சி தாக்குதல் பற்றி கூறினர். இதில் பூச்சி கட்டுப்பாடு குறித்து தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் முனைவர் செந்தில்குமார் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் பல கோரிக்கைகளை வேளாண்மை இணை இயக்குனர் சிங்காரம் முன்னிலையில் எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் மிளகு அறுவடை கருவி உலர் களம் அமைப்பு, உழவர் சந்தை அமைத்தல், குளிர் சாதன வசதி யுடன் கூடிய கிடங்கு, காட்டு விலங்குகளிடமிருந்து பயிர் பாதுகாப்பிற்காக மானியத்தில் தடுப்பு அமைத்தல் குறித்தும் விவாதிக்கப் பட்டது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் கலந்து கொண்டு வேளாண்மை துறை சார்ந்த திட்டங்கள் அனைத்தையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் இந்நிகழ்ச்சிக்கான முழு ஏற்பாடுகளையும் ஆத்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சோபனா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் துரையரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் செய்து இருந்தனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 06.09.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 35 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 36 | 42 |
| 1B | கத்திரி(Nadu) | 55 | 58 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 68 |
| 2 | வெண்டை | 22 | 26 | 58 | மேரக்காய் | 20 | 25 |
| 3 | தக்காளி (நாடு) | 18 | 22 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 34 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 17 | 20 | 60 | கேரட் | 80 | 90 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 55 | 60 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 45 |
| 6 | புடலை | 20 | 24 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 25 | 30 | 63 | டர்னிப் | 40 | 45 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 20 | 24 |
| 9 | பாகற்காய் | 25 | 30 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 22 | 28 | 66 | காளிபிளவர் | 38 | 42 |
| 11 | பூசணி | 15 | 20 | 67 | பட்டாணி | 170 | 175 |
| 12 | அரசாணி | 18 | 22 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 40 | 69 | இஞ்சி | 60 | 134 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 40 | 44 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 38 | 42 | 71 | பென்னி பீன்ஸ் | 80 | 90 |
| 16 | பெ.வெங்காயம் | 50 | 54 | 72 | குடமிளகாய் | 45 | 50 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 22 | 26 | 73 | | | |
| 18 | பச்சை மொச்சை | 45 | 50 | 74 | பஜ்ஜி மிளகாய் | 35 | 40 |
| 19 | முருங்கை | 28 | 32 | 71A | | | |
| 20 | தேங்காய் | 35 | 38 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 44 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | | | | 75 | எலுமிச்சை | 140 | 150 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 75 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 35 | 38 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 35 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 90 | 95 | 80 | திராட்சை | 100 | 110 |
| 30 | புதினா | 10 | 11 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 50 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசனி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 85 | 90 |
| 40 | கோவக்காய் | 25 | 28 | 91 | பூவன் | 55 | 60 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 55 | 60 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 22 | 26 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 65 | 68 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 34 | | | | |

# துவரைப் பயறு சாகுபடிக்கு மானிய விலையில் விதைகள்



கோயம்புத்தூர், செப்.6

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனைமலை வட்டாரத்தில் கொள்ளு, தட்டைப் பயறு, உளுந்து வகைப் பயிர்கள் தனிப்பயிராகவும், தென்னையில் ஊடுபயிராகவும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது துவரைப் பயறு வகையை அதிகரிக்க இலக்கு பெறப்பட்டுள்ளது. மேலும் துவரைப் பயறு தனிப்பயிராகவும் ஊடுபயிராகவும் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி விதை கிராமத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் விதைகள் வழங்கப் பட்டுள்ளது. நிலக்கடலையில் அதிக மகசூல் தரக்கூடிய 10 ஆண்டுகளுக்கு உட்பட்ட ரகங்களான கதிரி லேபாக்டி 1812, பவானி சாகர்2, திண்டிவனம் 14 எள்ளில் திண்டிவனம் 14, விருதாச்சலம் 4 போன்ற உயர் விளைச்சல் இரகங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

2.5 ஏக்கர் பரப்பளவில் எள் மற்றும் நிலக்கடலையில் செயல்விளக்கத்திடல் அமைக்க தேசிய எண்ணெய் வித்துக்கள் திட்டத்தின் கீழ் 50 சதவிதத்தில் மானிய விலையில் வழங்கப்படுகிறது. மேலும் நிலக்கடலை, எள் பயறுவகை மற்றும் தானியங்களில் அதிக மகசூல் மற்றும் மண்ணில் வளத்தினை காக்கவும், நுண்ணூட்டக் கலவைகள், உயிர் உரங்கள் மானிய விலையில் வழங்க இலக்குகள் பெறப்பட்டுள்ளது. நிலைக் கடலையில் விதைப்பண்ணை ஆய்வில் வேளாண்மை உதவி இயக்குநர் விவேகானந்தன், வேளாண்மை அலுவலர் வெங்கடேசன், விதை உற்பத்தி அலுவலர் மாடசாமி, வேளாண்மை உதவி அலுவலர் அம்சத், வேளாண்மை உதவி அலுவலர் கரீம்ராஜா மற்றும் தேசிய உணவு மற்றும் ஊட்டச் சத்துகள் திட்டத்தின் தொழில் நுட்ப உதவியாளர் சூர்யபிரகாஷ் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# விதை விற்பனை உரிமம் பெறாதவர்களிடம் விதைகளை வாங்க வேண்டாம்

## விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் எச்சரிக்கை

விருதுநகர், செப்.6

விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் காரீப் பருவத்தில் பயிரிடும் விவசாயிகள் விதை விற்பனை உரிமம் பெறாத விற்பனையாளர்களிடம் விதைகளை வாங்க வேண்டாம் என்று விதை ஆய்வு துணை இயக்குநர் ஆ.வனஜா எச்சரித்துள்ளார்.

தற்போது விதைப்பு பருவத்தில் மக்காசோளம், பருத்தி, சூரிய காந்தி, கம்பு, நெல் பயிரிடும் விவசாயிகள் தங்கள் வட்டாரத்தில் உள்ள விதை விற்பனை உரிமம் பெற்ற அரசு, அரசு சார்பு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் மட்டுமே விதைகளை வாங்க வேண்டும். விதை உரிமம் பெறாதவர் களிடம் விதைகளை வாங்க வேண்டாம் என எச்சரிக்கப்படுகிறது. விவசாயிகள் விதைகளை வாங்கும் போது மறக்காமல் விலை பட்டியலை (இரசீது) கேட்டு வாங்க வேண்டும்.

மேலும் விதைச்சட்டம் 1966-ல் குறிப்பிட்ட 14 காரணிகளும் அட்டையில் குறிப்பிட்டுள்ளதா என்பதை உறுதி செய்த பின்னரே வாங்க வேண்டும் . மேலும் விதை விற்பனையாளர்கள் உரிமம் பெறாமல் விதைகளை விற்பனை செய்தாலோ, விற்பனை பட்டியல் இல்லாமல் விற்பனை செய்தாலோ, போலி விதைகளை விற்பனை செய்தாலோ சம்பந்தப்பட்ட விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விதை ஆய்வு துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**பருத்தி விவசாயம் செய்யும் விவசாயிகள் கவனத்திற்கு**

மத்திய அரசு வீரிய பருத்தியில் காய்ப்புழு எதிர்ப்பு சக்தியுடைய (பி.டி) பருத்தி விதைகள், மட்டுமே விற்பனைக்கும் மற்றும் சாகுபடிக்கும் அனுமதி வழங்கியுள்ளது. பருத்தியில் களைக் கொல்லி எதிர்ப்பு சக்தியுடைய மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி விதைகளை உற்பத்தி செய்வதற்கோ, விற்பனை செய் வதற்கோ அனுமதி வழங்கப்படவில்லை. இதற்கு மாறாக மத்திய அரசினால் அனுமதி வழங்கப்படாத களைக்கொல்லி எதிர்ப்பு சக்தியுடைய பருத்தியை சாகுபடி செய்வதோ, விற்பனை செய்வது

சட்டப்படி குற்றமாகும். இதை மீறுபவர்கள் மீது விதை (கட்டுப் பாட்டு) ஆணை மற்றும சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பழக்கன்று, தென்னை மற்றும் நாற்றாங்கால் விற்பனை செய்யும் நர்சரி உரிமை யாளர்கள் தவறாமல் விதை விற்பனை உரிமம் பெற்றிருக்க வேண்டும். உரிமம் இல்லாமல் விதை விற்பனை மற்றும் நர்சரி வைத்திருப்பவர்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் ஆ.வனஜா அறிவுறுத்தியுள்ளார்.



# விதை நேர்த்தி செயல் விளக்கமளித்த வேளாண்மை கல்லூரி மாணவர்கள்



விருதுநகர், செப்.6

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டு இளங்கலை வேளாண் துறை மாணவர்கள் ஆகாஷ், ஆனந்த முருகன், எழில் ஆகாஷ், ஸ்ரீதர் நவீன், முகைதீன் பைசல், பாலசுப்ரமணியன், ஆகாஷ் குபேந்திரன் மற்றும் சந்தோஷ் சிவன் வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் கிராம தங்கல் திட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் தங்கி விவசாயிகளை நேரில் சந்தித்து ஆலோசனைகளையும் செயல்முறை விளக்கமும் அளித்து வருகின்றனர்.






இம்மாணவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி, வேளாண்மை அலுவலர் குருலட்சுமி, பாட ஆசிரியர் டாக்டர் ஜெயந்தி மற்றும் குழு ஆலோசகர் சதீஷ் குமார் அறிவுரையின்படி, ஸ்ரீவில்லிபுத்தூர் வண்ணியம்பட்டி கிராமத்தில் நெல்லுக்கு டிரைக்கோ டெர்மா விரிடி பயன்படுத்தி விதைநேர்த்தி மற்றும் அதன் செய்முறை பற்றியும் விவசாயி களிடம் எடுத்துரைத்தனர். இது உயிர் டிரைக்கோடெர்மா விரிடி எனப்படும் பூசணம் கொண்ட ஓர் உயிரியல் பூஞ்சாணக் கொல்லி. இது வேரழுகல், கிழங்கு அழுகல், வாடல், செவ்வழுகல், தண்டழுகல், சாம்பல் நோய்கள், நாற்றழுகல் நோய், இலைக்கருகல், இலைப் புள்ளி மற்றும் பல நோய்களை கட்டுப்படுத்துகிறது என்பதை விவசாயிகளுக்கு விளக்கினார்,


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கோழியா? முட்டையா? எது முதலில் வந்தது எது? தெரியுமா?

கோழி முதலில் வந்ததா? முட்டை முதலில் வந்ததா? இந்த கேள்வி ஆதி காலம் தொட்டு விடை காண்பதற்கு விஞ்ஞான உலகம் படாத பாடுபட்டு வருகிறது. கோழி இல்லாமல் முட்டை கிடையாது. முட்டை இல்லாமல் கோழி கிடையாது. தற்போது கோழி தான் முதலில் வந்திருக்க முடியும் என்ற முடிவுக்கு ஆராய்ச்சியாளர்கள் வந்துள்ளனர்.



**அது என்ன ஆராய்ச்சி?**

சாதாரணமான ஆராய்ச்சி அல்ல அது. கனடா நாட்டின் மாண்ட்ரீல் அறிவியல் மைய ஆய்வாளர்கள் கீழ்க்கண்ட ஆய்வு பற்றி தரும் தகவல்கள் பற்றி காண்போம்.

பொதுவாக தவளைகள் கூட்டம்கூட்டமாக தங்களுடைய முட்டைகளை நீர்நிலையில், நீரில் இட்டு மிதக்கவிடும். தவளையின் முட்டைகள் ஒருவித கூழ்ம நிலையில் இருக்கும். அவை தண்ணீரில் இருந்தால் தான் முட்டையின் உள்ளே இருக்கும் புரதக்கூறுகள், காயாமல் முட்டை கருவாகும். தண்ணீர் இல்லை என்றால் முட்டையின் உள்ளே இருக்கும் கருக்கள் கசிந்து முட்டைகள் காய்ந்து விடும், கருக்கள் அழிந்து விடும்.

அதுபோல தான் பறவை இனத்தை சேர்ந்த கோழிகளும் முட்டையிட்டு, அடை காத்து குஞ்சு பொறிக்கும். ஆனால் நீர்வாழ் உயிரினங்களின் முட்டைகளும் இந்த கோழி முட்டையிலிருந்து வேறுபட்டவை. இவை 'அம்னோடிக்' (AMNIOTIC EGG) முட்டை என்று அழைக்கப்படுகின்றன. இந்த முட்டைகள் கடினமான வெளிப்புற ஓடுகளை கொண்டுள்ளன. இதனால் தண்ணீர் இல்லாவிட்டாலும் கூட கோழி முட்டையின் உள்ளே கரு புரதங்கள் காய்ந்து விடாமல் பாதுகாப்பாக இருக்கின்றன. அம்னோடிக் வகை முட்டை உருவாக, ஒரு வித புரதம் தேவைப்படுகிறது.

இந்த புரதம் கோழியின் உடலிலிருந்து உருவாகி அது முட்டையை உருவாக்கிட உதவுகிறது. இந்த ஆய்வுகளின்படி புரதம் இல்லாமல் முட்டை உருவாக்க முடியாது. அதாவது கோழி இல்லாமல் முட்டை உருவாக காரணமான புரதம் இல்லை என்றால் கோழி வந்த பின்னரே முட்டை வந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்துள்ளனர்.

இனிமேலாவது இந்த விவாதத்திற்கு ஒரு முற்று புள்ளி வைக்கலாமா அல்லது தொடருமா என்பது யார் அறிவார்கள். அறிவியல் என்றும் மாறக்கூடியது என்பதை மறந்துவிட வேண்டாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# அட்மா திட்டத்தில் மண்டபம் வட்டார விவசாயிகளுக்கு பட்டறிவு பயணம்



இராமநாதபுரம், செப்.6

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் (அட்மா) கீழ் மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள் பட்டறிவு பயணம் இனத்தின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணையம் என்ற தலைப்பில் இராமநாதபுரம் வட்டார வீரபாண்டியன் வலசை கிராமத்தில் உள்ள பஞ்சவர்ணம் பண்ணையில் 50 விவசாயி களை அழைத்து வரப்பட்டு விவசாயிகளுக்கு பண்ணை உரிமையாளர் நந்தகுமார், விவசாயிகளிடத்தில் சிறப்புரையாற்றி பேசுகையில், ஒருங்கிணைந்த பண்ணையத்தின் நோக்கம், பயன்கள் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையத்தில் வேளாண் மையுடன் கால்நடைகள், கோழியினங்கள், செம்மறியாடு வளர்ப்பு மற்றும் தேனீ வளர்ப்பு ஆகியவற்றை ஒரே இடத்தில் இணைத்து பராமரித்து ஆண்டு முழுவதும் கூடுதல் வருவாயினையும் பெற முடியும் என்று அவர்களுடைய அனுபவங்களை கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மண்டபம் வட்டார தொழில்நுட்ப மேலாளர் பானுமதி மற்றும் வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர் பவித்ரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இலைவண்ண அட்டை குறித்து மாணவர்கள் செயல்விளக்கம்



திண்டுக்கல், செப்.6

திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம கிராமிய பல்கலைக்கழக வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் இளங்கலை வேளாண்மை பயிலும் நான்காம் ஆண்டு மாணவர்கள் கு.சிவ அனவரதன், ம.தமிழ்முழக்கன், தி.கருப்பணன், மு.ரூபன் மற்றும் ஐ.ஜெய்சன் ஐசக் ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் திருச்சி லால்குடி வட்டாரம் சிறுமயங்குடி ஊராட்சியில் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, இலைவண்ண அட்டை பயன்பாடு குறித்து சிறுமயங்குடி பகுதியில் அருண் உதயம் என்ற விவசாயி நெல் வயலில் செயல்விளக்கம் அளித்தனர். மேலும், இலை வண்ண அட்டை (Leaf colour chart-LCC) பயிரின் தேவையறிந்து உரமிட பயன்படுத்தப்படுகிறது. இதில் 1 முதல் 5 பசுமை நிற பட்டைகள் உள்ளன. நெல்லில் தழைச்சத்து மேலாண்மை இலை வண்ண அட்டையின் மூலம் முடிவு செய்யப்பட்டு அளவிடப்பட்ட எண்ணை வைத்து முடிவு செய்யப்படுகிறது என்று மாணவர்கள் செயல்விளக்கம் அளித்தனர்.



# விதைப் பரிசோதனை நிலையத்தில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு இணை இயக்குநர் ஆய்வு



தஞ்சாவூர், செப்.6

சென்னை விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இணை இயக்குநர் (பொ) எம்.ஜோதிலெட்சுமி 5.9.24 அன்று தஞ்சாவூர் விதைப் பரிசோதனை நிலையத்தின் பணிகளை ஆய்வு செய்தார்.

விதைப் பரிசோதனை நிலையத்தில் பெறப்படும் விதை மாதிரிகளின் தரத்தை நிர்ணயிக்க கூடிய முக்கிய காரணிகளான முளைப்புத்திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிறரக கலப்பு ஆகியன கணக்கிடப்படும் முறைகளையும் மற்றும் அவற்றிற் கான ஆய்வக உபகரணங்களின் செயல்பாடுகளையும் ஆய்வு செய்தார். சான்று விதை மாதிரிகள், ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் பணிவிதை மாதிரிகள் முறையாக பெறப்பட்டு குறித்த நேரத்தில் பகுப்பாய்வு முடிவுகளை வழங்குவது குறித்தும் ஆய்வு செய்தார்.

விதை முளைப்புத்திறன் அறையில் வைக்கப்பட்டிருக்கும் விதை மாதிரிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். விதை மாதிரிகள் காப்பு அறையை பார்வையிட்டு சேமிப்பு விதைகளை தரத்துடன் பாதுகாத்திட உரிய அறிவுரை வழங்கினார். பாரம்பரிய நெல் இரகங் களை சேகரித்து வைத்துள்ள விதை வங்கியினை பார்வையிட்டார். தரமான விதைகளே விவசாயத்தின் முக்கிய இடுபொருள் அத்தகைய தரமான விதைகளை விவசாயி களுக்கு குறித்த நேரத்தில் வழங்குவதே விதைப்பரிசோதனை நிலையத்தின் முக்கிய பங்கு என்பதையும் அத்தகைய பங்கினை சிறப்பாக செயலாற்றிட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இவ்வாய்வின் போது அர்ஜீன் சிங், தொழில்நுட்ப அலுவலர், மண்டல உயிர்ம மற்றும் இயற்கை வேளாண்மை மையம், பெங்களூர், எம்.வானதி மதிப்பீட்டாளர், தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்பு துறை மற்றும் விதைப் பரிசோதனை நிலைய அலுவலர்கள் உடனிருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வேளாண்மையில் புதுப்பிக்கவல்ல ஆற்றல்- சாண எரி வாயுக்கலன்

● கால்நடைக்கழிவு மற்றும் இதர அங்ககக் கூட்டுப் பொருள்களிலிருந்து காற்றில்லா உயிர் வேதியியல் மாற்றத்தின் மூலம் சாண எரிவாயு உற்பத்திச் செய்யப்படுகிறது.

● இந்தியாவில் உள்ள ஏறக்குறைய 300 மில்லியன் கால்நடைகளின் மூலம், தோராயமாக 3 மில்லியன் டன் சாணம் கிடைக்கின்றது.

● தமிழ்நாட்டில் உள்ள 9.5 மில்லியன் கால்நடை களிலிருந்து பெறப்படும் சாணத்தைச் எரிவாயுவாக மாற்றுவதன் மூலம் சுமார் 2000 டன் நிலக்கரி பயன்பாட்டினைக் குறைக்கலாம்.

● சாண எரிவாயுவானது, சமைப்பதற்கும், விளக்கு எரிக்கவும், வெப்ப ஆற்றல் மற்றும் மின் உற்பத்திச் செய்யவும் பயன்படுகிறது. சாண எரிவாயுவினைப் விறகிற்காக பயன்படுத்து வதன் மூலம் விறகிற்காக மரங்கள் வெட்டப்படுவதும் காற்று மாசுபடுவதும் குறைக்கப்படுகிறது.

● ஒரு கனமீட்டர் கொள்ளளவு கலன் மூலம் 4 பேர் உள்ள குடும்பத்திற்கு வேண்டிய சமையலைச் செய்யலாம் சுமாராக ஒரு கனமீட்டர் கலனுக்கு ஒரு நாளுக்கு 25 கிலோ கிராம் சாணம் அல்லது சாணக் கரைசல் தேவைப்படும்.

● ஒரு பசு நாளொன்றுக்கு சராசரியாக 10 கிலோ சாணத்தை இடுகிறது.ஒரு வீட்டில் 2 பசு மாடுகள் இருப்பதாக வைத்துக் கொண்டால், 2 பசுக்கள் மு 10 கிலோ = 20 கிலோ. எனவே கிடைக்கும் மொத்த சாணத்தின் அளவு = 20 கிலோ.

● ஒரு கிலோ கிராம் சாணத்திலிருந்து 0.04 கன மீட்டர் (அ) 40 லிட்டர் சாண எரிவாயு கிடைக்கிறது. 20 X 0.04 கன மீட்டர் = 0.8 கன மீட்டர் சாண எரிவாயு.20 மு 40 லிட்டர் = 800 லிட்டர் சாண எரிவாயு கிடைக்கும்.எனவே 1 கனமீட்டர் கொள்ளளவுடைய சாண எரிவாயுக்கலனைக் கட்டலாம்.

● சாண எரிவாயுக்கலனிலிருந்து எரிவாயு தயாரித்த பின் வெளிவரும் செரித்த சாணக்கரைசலில் தழைச்சத்து 1.5 முதல் 2.5 சதவிகிதமும், சாம்பல் சத்து 1.0 முதல் 1.5 சதவிகிதமும், மணிச்சத்து 0.8 முதல் 1.2 சதவிகிதமும் உள்ளன.

● எனவே, செரித்த சாணக் கரைசலை இயற்கை உரமாகப் பயன்படுத்துவதன் மூலம் பயிர்களின் வளர்ச்சியைத் தூண்டி விளைச்சலை அதிகரிக்கச் செய்யலாம். செரித்த சாணக் கரைசலை நேரடியாகவோ அல்லது நீர்ப்பாசன வாய்க்கால்கள் மூலமாகவோ பயிர்களுக்குப் பயன்படுத்தலாம். செரிக்கப்பட்ட கரைசலைப் பயிர்களுக்கு உரமாகப் பயன் படுத்துவதால் பொருட்களின் விளைச்சல் அதிகமாவதாகக் கண்டறியப்பட்டு உள்ளது என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டு கொண்டுள்ளார்.



# ஒருங்கிணைந்த பருத்தி இளஞ்சிவப்பு காய்ப்புழு மேலாண்மை

பருத்தி சாகுபடியில் பூச்சி தாக்குதல் மற்றும் சத்து பற்றாக்குறை காரணமாக மகசூல் குறைகிறது, முக்கியமாக சிவப்புக் காய்ப்புழு தாக்குதல் அதிகமாக உள்ளதால் அதனை நிவர்த்திசெய்ய சேலம் மாவட்டம், நங்கவள்ளி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் து.ரமேஷ் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கினார்.

**பயிர்ச் சுழற்சி**

இளஞ்சிவப்புக் காய்ப்புழு வாழ்க்கைச் சுழற்சியைச் சீர்குலைக்க மக்காச்சோளம் அல்லது சோளம் போன்ற பருத்தி குடும்பத்தைச் சாராத தாவரங்களுடன் பருத்திப் பயிர்களைப் பயிரிடவும். இந்த நடைமுறை பூச்சியின் எண்ணிக்கையைக் குறைக்க உதவும். இப்பூச்சியின் தாக்குதலைத் தவிர்க்க முன் பருவத்திலேயே பருத்தியை விதைக்க வேண்டும். பயிர் சேதங்களை அகற்றி வயல்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**கோடை உழவு**

நிலத்தை ஆழமாக உழுவதன் மூலம் கூட்டுப்புழுக்களை அழிக்கலாம். சரியான பருவத்தில் விதைப்பு செய்வதன் மூலம் இப்பூச்சியின் தாக்குதலைத் தவிர்க்கலாம்.

**கண்காணிப்பு மற்றும் பொறி**

இளஞ்சிவப்புக் காய்ப்புழுக்களின் நடமாட்டம் மற்றும் அடர்த்தியைக் கண்டறிய இனக்கவர்ச்சிப் பொறிகளைப் பயன் படுத்தி பருத்தி வயல்களைத் தொடர்ந்து கண்காணிக்கவும். மேலும், கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் கண்காணிக்க இனக்கவர்ச்சிப் பொறி (ஓர் எக்டருக்கு 12 பொறிகளை அமைக்கலாம்) உதவுகிறது.

**உயிரியல் கட்டுப்பாடு**

இளஞ்சிவப்புக் காய்ப்புழுவின் இயற்கை எதிரிகளான ஒட்டுண்ணி, குளவிகள் மற்றும் பொறி வண்டுகள் போன்ற நன்மை செய்யும் பூச்சிகளால் சுற்றுச்சூழல் அமைப்பில் சமநிலை ஏற்படுகிறது. இந்த நன்மை பயக்கும் உயிரினங்கள் இளஞ்சிவப்புக் காய்ப்புழுக்களின் எண்ணிக்கையை இயற்கையாகவே கட்டுப்படுத்த உதவுகின்றன. மேலும், டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் முட்டை ஒட்டுண்ணிகள் ஓர் எக்டருக்கு 40,000 முட்டைகளை (15 நாள்இடைவெளியில் 3 முறைவிதைத்த 45-வது நாளிலிருந்து வெளியிட வேண்டும்) பரிந்துரைக்கப்படுகிறது.

## இரசாயனகட்டுப்பாடு

தேவைப்படும் போது, இளஞ்சிவப்புக் காய்ப்புழுவைக் கட்டுப் படுத்த பூச்சிக்கொல்லிகளை கவனமாகப் பயன்படுத்த வேண்டும். பூச்சிக்கொல்லி எதிர்ப்புத் திறன் அபாயத்தைக் குறைக்க பல்வேறு இரசாயனப் பூச்சிக்கொல்லிகளை மாற்றி மாற்றிப் பயன்படுத்த வேண்டும். பூச்சியின் வாழ்க்கை சுழற்சியின் அடிப்படையில் சரியான நேரத்தில் பயன்படுத்தும் போது பூச்சிகளைக் கட்டுப் படுத்துவது எளிதாகிறது. இப்பூச்சியின் தாக்குதல் பொருளாதார சேதநிலையைத் (10 சதவிகிதம் காய் சேதம்) தாண்டும் பொழுது கீழ்க்காணும் பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை ஓர் எக்டருக்குத் தெளிக்கவேண்டும்.

- இமாமெக்டின் பென்சாயோட் 5 எஸ். ஜி 190கி
- இமாமெக்டின் பென்சோயேட் 1.9 ஈசி 580 மி.லி.
- குயினால்பாஸ் 20 ஏ.எஃப் 1750 மி.லி.
- ஸ்பைனிடோரம் 11.7 எஸ்.சி 450 மி.லி.
- ஃபென்புரோபோத்ரின் 10 ஈசி 750 மி.லி.
- ஃபென்புரோபோத்ரின் 30 ஈசி 250 மி.லி.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இந்திய விவசாயத்தின் சவால்களை சமாளிக்க குளோபல் நானோ கனெக்ட் மாநாடு




கோயம்புத்தூர், செப்.6

நானோ தொழில்நுட்பத்தின் முன்னோடியான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 5 மற்றும் 6.9.24ல் நானோ கனெக்ட் குறித்த உலகளாவிய மாநாடு நடந்தது. இது நானோ விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக தற்போதைய கண்டுபிடிப்புகள், அவற்றின் பன்முக பயன்பாடுகள், நானோ – உயிரியல் பாதுகாப்பு ஒழுங்குமுறை கட்டமைப்பு மற்றும் விவசாயம் தொடர்புடைய இதர துறைகளில் நானோ தொழில்நுட்பத்தின் நிலை ஆகியவற்றை வெளிக்கொணரும் நோக்கத்துடன் உள்ளது. இந்த நிகழ்வானது மேம்படுத்தப்பட்ட பயன்பாட்டுத்திறன், நானோ உணவு அமைப்புகள், பூச்சிகள், நோய்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு களை முன்கூட்டியே கண்டறிவதற்கான நானோ–அக்ரி உள்ளீடுகள், நானோ – உணவு அமைப்புகளில் நானோ தயாரிப்பு களின் பாதுகாப்பு மற்றும் நானோ –நிவர்த்தி செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. நாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுயசார்பை உறுதி செய்யும் அதே வேளையில் பண்ணை உற்பத்தித்திறனை நிலைநிறுத்துவதற்கு நானோ தயாரிப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக பல்வேறு தலையங்க பகுதிகளை வழங்கவும், விவாதிக்கவும் மற்றும் மேம்படுத்தவும் இந்த நிகழ்வு வடிவமைக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி, வேளாண்மையில் நானோ தொழில் நுட்பத்தில் உலகளாவிய நிகழ்வை நடத்துவதில் மகிழ்ச்சி தெரிவித்தார். இந்தியாவில் உள்ள சவலால்களை எதிர் கொள்ளும் வகையில் ஆராய்ச்சியை தொடங்கும் நோக்கத்துடன் 2010ம் ஆண்டிலேயே வேளாண் நானோ தொழில் நுட்பத்திற்கான பிரத்யேக மையத்தை நிறுவிய இந்தியாவின் முதல் மாநில வேளாண் பல்கலைக்கழகம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்று அவர் பெருமிதம் கொண்டார்.

சுருங்கி வரும் விளைநிலங்கள், நீர் பற்றாக்குறை, விவசாயத்தில் இருந்து மக்கள் வெளியேறுதல், குறைந்த உரங்களின் விளைச்சல் விகிதம் மற்றும் பசுமைப்புரட்சியின் பின் தங்கிய நிலையை மேம்படுத்தவும், பண்ணை உற்பத்தி மற்றும் கிராமப்புற வாழ்வா தரத்தை எளிதாக்கும் செயல்முறைகள் மற்றும் தயாரிப்புகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் சில சவால்களை விவசாய – நானோ தொழில்நுட்பம் மூலம் தீர்க்கும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

TNAUஇல் உள்ள நானோ தொழில்நுட்ப மையம் 2010ல் ரூ.12 கோடி அதிநவீன உள்கட்டமைப்பு வசதி, அதிநவீன உபகரணங்கள் மற்றும் மனிதவளக் கட்டிடம் மையம் போன்றவற்றுடன் நிறுவப் பட்டது. 30 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள வெளிப்புற நிதி உதவியுடன் கூடிய ஆராய்ச்சித் திட்டங்களை Globa Affairs Canada, IDRC, DST Nano Mission, ICAR, SERB தவிர இஃப்கோ மற்றும் கோரமண்டல் போன்ற அமைப்புகள் மூலம் உருவாக்கியது. இது 10க்கு மேற்பட்ட நானோ தொழில்நுட்பங்கள், 2 காப்புரிமைகள் மற்றும் 100க்கும் மேற்பட்ட உயர் தாக்க காரணி வெளியீடுகளை உருவாக்க உதவியது. செயல்முறைகள், தயாரிப்புகள், காப்பு உரிமைகள், வெளியீடுகளை மற்றும் நானோ தொழில்நுட்பத்தின் மூலமாக பொதுமக்களின் பார்வையை மேம்படுத்துதல் தவிர, நாட்டில் நானோ–அக்ரி உள்ளீடுகள் மற்றும் உணவுப் பொருட் களைப் பயன்படுத்துவதற்கான DBT ஒழுங்கு முறை வழிகாட்டுதல் களைத் திட்டமிடுவதற்கு தேசிய அளவில் கொள்கை முடிவுகளில் TNAU முக்கிய பங்கு வகித்தது. 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நானோ உரங்கள் பற்றிய அறிவிப்புக்கு முக்கிய பங்கு வகித்தது.

புதுதில்லியின் ICAR இன் துணை இயக்குநர் ஜெனரல் (இயற்கை வள மேலாண்மை) இந்நிகழ்ச்சியின் தலைமை விருந்தினரா கபங்கேற்று விவசாய நானோ தொழில்நட்பத்தில் புதுமைகளை உருவாக்கி, வண்ணமயமான உலகளாவிய நிகழ்வாக மாற்றிய தற்காக TNAU மற்றும் அமைப்புச் செயலாளரை வாழ்த்தினார். TNAU ஆராய்ச்சியின் புதிய பகுதிகளைத் தொடங்குவதற்குப் பெயர் பெற்றுள்ளது. அதுபோன்ற ஒரு முக்கியப் பகுதி ‘ விவசாய நானோ தொழில்நுட்பம்‘ ஆகும். விவசாய நானோ தொழில்நுட்பத்தில் கல்வித் திட்டங்களை வெளிப்படுத்துதல் பத்துக்கும் மேற்பட்ட தொழில் நுட்பங்களை உருவாக்குதல், வணிகரீதியான நானோ தயாரிப்புகளை அறிவியல் பூர்வமாக சரிபார்த்தல், நானோ தயாரிப்புகளை மதிப்பிடுவதற்கு உதவிய கொள்கை கட்டமைப்பை எளிதாக்குதல் ஆகியவற்றில் TNAU முக்கிய பங்கு வகித்தது. முதல் நானோ உரம் 2021 இல் அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளில் பல நானோ உர தயாரிப்புகள் அறிவிக்கப்

பட்டுள்ளன. நானோ உரங்களின் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் தொழில்கள் நிறுவனங்கள்ஆர்வம் காட்டி வருகின்றன.

இனிவரும் காலங்களில் உரங்களை மிச்சப்படுத்துவது உறுதி செய்யப்படுவதோடு, பொது இரசாயன பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டை கணிசமாக குறைக்கக் கூடிய நானோ அமைப்பு களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பல களைக் கொல்லிகள், பூச்சி கொல்லிகள், பூஞ்சைக் கொல்லிகள், பயோஸ்டிமுலண்டுகள் மற்றும் பிறப்பொருட்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும்.

முனைவர் தமிழ்வேந்தன், பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முனைவர் K.S.சுப்பிரமணியன், கோரமண்டல் இன்டர்நேசனல் லிமிடெட் மற்றும் முனைவர் பு.வேல்முருகன் உதவி இயக்குநர் ஜெனரல் (SWM), ICAR, புதுதில்லி ஆகியோர் சிறப்புரை வழங்கினார்கள். முனைவர் பி.பாலசுப்பிரமணியம், இயக்குநர் (இயற்கை வள மேலாண்மை) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வரவேற்புரை வழங்கினார்.

நானோ தொழில்நுட்ப மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வி. கோமதி, நன்றியுரை வழங்கினார். அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்தைச் சேர்ந்த முன்னணி பேச்சாளர்கள் தங்கள் விரிவுரைகளை ஆன்லைனில் வழங்கினர். இந்த மாநாட்டு அறிவுப்பகிர்வு நிகழ்விலிருந்து வெளிவரும் பரிந்துரைகள் நாட்டில் விவசாய நானோ தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கட்டமைப்பை வலுப்படுத்த இன்றியமையாததாகும்.



# அனுமதி பெறாமல் கலப்பு உரங்களை விற்பனை செய்தால் உர விற்பனை உரிமம் ரத்து

## வேளாண்மை இணை இயக்குநர் எச்சரிக்கை

புதுக்கோட்டை, செப்.6

புதுக்கோட்டை மாவட்டத்தில் பயிர் சாகுபடிக்கு தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என வேளாண்மை இணை இயக்குநர்(பொ) வி.எம்.ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மாவட்டத்தில் தற்பொழுது சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெல் பயிர், மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, கரும்பு, தென்னை,




காய்கறிகள், மா, வாழை மற்றும் மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களுக்கு தேவையான உரங்கள் மாவட்டத்தில் இருப்பு வைக்கப் பட்டுள்ளது. பயிர் சாகுபடிக்கு தேவையான இரசாயன உரங்களான யூரியா 5417 மெட்ரிக் டன்கள், டிஏபி 1192 மெட்ரி டன்கள், பொட்டாஷ் 806 மெட்ரிக் டன்கள், காம்ப்ளக்ஸ் 5274 மெட்ரிக் டன்கள் மற்றும் சூப்பர் பாஸ்பேட் 879 மெட்ரிக் டன்கள் ஆகியன தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**உர உரிமம் பெற்ற மொத்தம் மற்றும் சில்லரை விற்பனை யாளர்கள் கவனத்திற்கு**

- மானிய உரங்களை பிற மாவட்டங்களுக்கு அனுப்புவதோ, பிற மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்யவோ கூடாது.

- உர விற்பனை உரிமத்தில் அனுமதி பெற்ற நிறுவனங் களிடமிருந்து கொள்முதல் செய்து, அனுமதி பெற்ற இடங்களில் மட்டுமே இருப்பு வைத்து விற்பனை செய்திட வேண்டும்.

● உரிமத்தில் அனுமதி பெறாமல் கலப்பு உரங்களை இருப்பு வைத்து விற்பனை செய்தல் கூடாது.

● உர மூட்டையின்மேல் அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்யக்கூடாது.

● விற்பனை நிலையத்தில் உர இருப்பு மற்றும் விலை விபர பலகையினை விவசாயிகளின் பார்வையில் படும்படி வைத்து தினசரி பராமரிக்கப்பட வேண்டும்.

● உரங்களை விற்பனை முனையக் கருவி மூலம் மட்டும் விற்பனை செய்திட வேண்டும்.

● விவசாயிகளுக்கு தேவையற்ற இடுபொருட்களை இணைத்து விற்பனை செய்யக்கூடாது.

● தரமற்ற மற்றும் போலியான உரங்களை விற்பனை செய்தல் கூடாது.




மேலும், விவசாயிகளுக்கு தரமான உரங்கள் விநியோகம் செய்யப்படுகிறதா என உர ஆய்வாளர்கள் திடீர் ஆய்வு மேற்கொள்ளும் பொழுது, உரங்களை, அதிக விலைக்கு விற்பனை செய்தல், விவசாயம் அல்லாத தேவைகளுக்கு மானிய உரங்களை விற்பனை செய்தல், உரம் கடத்தல், பதுக்கல் ஆகிய செயல்களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் அத்தியாவாசிய பண்டங்கள் சட்டம் – 1955 உரக்கட்டுபாட்டு ஆணை – 1985 மற்றும் உர நகர்வு கட்டுப்பாட்டு ஆணை 1973 ஆகியவற்றின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மீறினால் உர உரிமம் இரத்து செய்யப்படும் எனவும் எச்சரிக்கப்படுகிறது என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம்.ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# தலைவாசல் வட்டார வேளாண்மை துறை மூலம் மானாவாரி பகுதியில் ஒருங்கிணைந்த பண்ணை திட்டம் துவக்கம்




சேலம், செப்.6

மானாவாரி வேளாண்மை மேம்பாட்டு திட்டத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டம், நாவகுறிச்சி கிராமத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சின்னதுரை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குணசேகரன், அட்மா குழு தலைவர் மணி என்கிற பழனிச்சாமி, பாலமுருகன், வேளாண்மை இணை இயக்குனர், சேலம் சிங்காரம், வேளாண்மை உதவி இயக்குனர் தலைவாசல் கவிதா, திட்டம் துவங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தில் கறவை பசு மக்காச்சோள செயல் விளக்கம், தேனி வளர்ப்பு பெட்டி, மண்புழு வளர்ப்பு தொட்டி மற்றும் பழக்கன்றுகள் உழவர்களுக்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது.

உழவர்கள் தொடர்ந்து வருமானம் பெறவும் கூடுதல் வருவாய் பெறவும் ஐந்து விதமான திட்ட பலன்கள் வழங்கப்படுகிறது. இதில் வழங்கப்படும் கால்நடைகளுக்கு காப்பீடு செய்யப்படுகிறது. மானாவாரி பகுதியில் உழவர்கள் கூடுதலாக வருவாய் பெற திட்டம் பெரிதும் உதவும். வழங்கப்பட்டுள்ள பசு, பழக்கன்றுகள், தேனி பெட்டி, மண்புழு தொட்டி, மக்காச்சோள பயிர் சாகுபடி பொருட்களாள் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

வேளாண்மை அலுவலர் மோனிசா, துணை வேளாண்மை அலுவலர் மணவழகன், கால்நடை உதவி மருத்துவர் சக்தி வேல், உதவி வேளாண்மை அலுவலர்கள் பிரகாஷ், கார்த்திக், சுப்பிரமணி, திவ்யபாலா, அட்மா திட்ட அலுவலர்கள் சக்தி, முத்துவேல் மற்றும் நாவக்குறிச்சி கிராம விவசாயிகள் பங்கேற்றனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.